# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

## பேண்-தகு அபிவிருத்தி


- அபிவிருத்தியைப் பேண்-தகு நிலைக்கு மாற்றுதல்
  இஸ்மாயில் செராகல்டீன்
- பேண்-தகு அபிவிருத்தி: சமூகவியலாளர்களின் அணுகுமுறை
  மைக்கல் எம். சேர்னியா
- பேண்-தகு அபிவிருத்தி: சூழலியலாளரின் அணுகுமுறை
  கொலின் றீஸ்
- பூமிக்கும் மனிதனுக்குமிடையிலான பிணைப்பு
- இலங்கையின் காலநிலை
  ரி.கே. பெர்னாண்டோ
- முதலாளித்துவமும் தொழில்நுட்பமும்
  ஜோசவ் பின்கெல்ஸ்ரைன்
- வெளிநாட்டு வர்த்தகத் தாராளப்படுத்தல்
  கே. ஜெயந்தக்குமாரன்
- நலன்புரி அரசு
  அ.வே. மணிவாசகர்
- பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
  பா. சிவாஜி
- இலங்கையில் கைத்தொழில் மயமாக்கம்: 1977-90
  கே. ஜெயந்தக்குமாரன்
- ஐந்தாம் தலைமுறை அதிவேகக் கணணிகள்
  எஸ். அன்ரனி நோபேட்
- இலங்கையின் காட்டுவளமும் பிரச்சினைகளும்
  பரீனா றுஸைக்
- இலங்கை: இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு மீதான சீர்திருத்தங்கள்
  எஸ். கீதபொன்கலன்


மார்கா நிறுவக வெளியீடு

இதழ் - 2, மலர் 2, 1995

# இலங்கையின் காட்டுவளமும் பிரச்சினைகளும்

பரீனா றுஸைக்

வளங்களைப் பௌதீகவளம், பண்பாட்டுவளம் எனும் இருபெரும் பிரிவினுள் அடக்கலாம். இதனுள் பல துணைப் பிரிவுகளும் உள்ளடங்கிக் காணப்படுகின்றன. இயற்கை வளங்கள் மனிதனால் ஓரளவு மாற்றியமைக்கக் கூடியதாகக், குறிப்பாகப் புதுப்பிக்கக் கூடியனவாக இருக்கின்றன. குறிப்பிட்ட சில வளங்கள் புதுப்பிக்கக் கூடியதாக இருந்த பொழுதிலும் அவை இயக்க அடிப்படையிலான செயன்முறையில் மாற்றங்களைப் பெற்று இயங்குவனவாதலால் ஒரே காலத்தில் பெற்ற இயலளவையோ அல்லது முக்கியத்துவத்தையோ பெறமாட்டாது. இத்தகைய வளங்கள் தொடர்ந்து பண்பாட்டுக்கு உட்பட்டு வரும்போது அருகிவரும் பண்பினைக் கொண்டுள்ளன. இவற்றுள் காட்டுவளம் குறிப்பிடத்தக்கது.

காட்டுவளம் என்பது மரங்களும், செடிகளும், கொடிகளும் செறிந்து செழிப்பாக வளர்ந்து இருக்கின்ற அடர்த்தியான ஒரு பரப்பினைக் குறிக்கின்றது. பௌதீகச் சூழலுக்கு ஏற்ப தாவரமானது இயற்கையாகவே அடர்த்தியாகவும், நிரம்பியும் காணப்படும் தாவரம் செறிந்த பகுதி இதுவெனலாம். உலகின் பல நாடுகளில் காட்டுவளங்கள் ஒரேதன்மையினதாக இல்லை. அவை கால, பரப்பியல் அடிப்படையில் தாவர அமைப்பிலும், பண்பிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. உலகில் அயனமண்டல நாடுகளிடையே அடர்த்தியான காடுகள் காணப்படுகின்றன. முனைவுப்பகுதிகளில் ஊசியிலைக்காடுகளைக் காணக்கூடியதாகவுள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், ஆபிரிக்காக் கண்டத்திலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் இயற்கைக்காடுகள் (Natural Forest) ஓரளவுக்குப் பரம்பிக் காணப்படுகின்றன. வட அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மீள்வனமாக்கப்பட்ட காடுகள் பெரும்பாலும் காணப்படுகின்றன.